21 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு

“ சங்கு கோண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கேல்லா மேடுத்தோதுவோமே ”


வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

Acc-No-10813

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 18-3-33

‘ஜேபியில் கை! ஜாக்கிரதை!’



ஜான் புல் இது வரையில் தான் செய்த அநேக ஜாலங்களும் பலியாது போகவே இப்போது வெள்ளைக் கடுதாசி சூழ்ச்சியில் இறங்கி யிருக்கிறன். நாட்டின் அறிவாளிகளை அப்புறப் படுத்தியாகி விட்டது. ஏமாந்த சோணங்கியான இந்தியனை மயக்க வெள்ளைக் கடுதாசியை ஒரு கை காட்டுகின்றது. எதிரே சர்ச்சில் கோஷ்டி என்ற நாயைக் குலைக்க விட்டிருப்பதும் ஜான் புல்லின் சூழ்ச்சியே. வெள்ளைக் கடுதாசி. நாயின் குலைப்பு, இவைகளில் சோணங்கி புத்தியைச் செலுத்தி யிருக்கும் சமயம் இந்தியனிட மிருக்கும் ஒன்றிரண்டு அதிகாரங்களும் களவு போகின்றன. நல்ல சூழ்ச்சியையா இது !

மாரீசன் மாயை !

பூரண சுயேச்சை வேண்டுமென்றும், சுதந்திர ஸாரமேனும் வேண்டுமென்றும் காங்கிரஸ் காரர்கள் போரிட்டுக் கொண்டிருக்கின்றனர். புதிய அரசியலில் இந்தியர்களுக்கு அதிகார மிருக்க வேண்டுமென்றும், குடியேற்ற நாட்டு அந்தஸ்தாவது இந்தியாவுக்கு கிடைக்க வேண்டுமென்றும் மிதவாதிகள் கூவிக் கொண்டிருக்கின்றனர். இந்தக் கூக்குரலை யெல்லாம் சிறிதேனும் பொருட் படுத்தாது பிரிட்டிஷ் அரசாங்கம் யதேச்சாதிகாரம் நடத்த விரும்புகிறது. மூன்று வட்ட மேஜைகளை நடத்தி ஏராளமாக பொதுப் பணத்தை விரயம் செய்து பார்த்தும் இந்தியர்களை ஏமாற்ற முடியவில்லை. 'கூட்டம் போடும் வழி'யை விட்டு விட்டு இப்போது கடுதாசி வழியை பிரிட்டன் ஆரம்பித்திருக்கின்றது. இன்றைக்கு 'வெள்ளைக் கடுதாசி' என்ற ஓர் வரப்பிரசாதத்தை (?) தந்து இந்தியாவைக் கடைத்தேற்றி விடுவதாக ஏமாற்றப் பார்க்கிறது. இத்தனை வட்டமேஜை சூழ்ச்சிகளிலும் தோற்றது போலவே இந்தக் கடுதாசி சூழ்ச்சியிலும் பிரிட்டன் தோற்கப் போகின்றதென்பதை இப்போதே சொல்லி விடுகின்றோம். வலது கையால் தேசபக்தர்களை யெல்லாம் சிறையிலடைத்து விட்டு, இடது கையால் அரசியல் சீர்திருத்தம் தருவதாகக் கூறுகின்ற பிரிட்டனை யார் மதிப்பார்கள்? உண்மையான இந்தியனெவனும் இந்த வெள்ளைக் கடுதாசியைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டான். நிற்க,

மிதவாதிகளுக்கும், லிபரல்களுக்கும் ஓர் எச்சரிக்கை! வெள்ளைக் கடுதாசி என்பது மாரீசன்! ஏற்கனவே இந்தியர்களுக்கு கொடுக்கப் பட்டுள்ள கொஞ்சம் நஞ்சம் அதிகாரத்தையும் பிடுங்கிக் கொண்டு வைஸ்ராய்களையும், கவர்னர்களையும் ஸர்வாதிகாரிகளாக்குவதற்கான சூழ்ச்சியே இந்த வெள்ளைக் கடுதாசி! ஆகவே உஷார்!

தேசபக்தர்கள் இந்த சூழ்ச்சிகளை யெல்லாம் லக்ஷியம் செய்யப் போவதில்லை. பிரிட்டனின் எவ்வளவோ சாமர்த்தியங்கள் மண்ணைக் கவ்வவில்லையா? அந்த மாதிரி இந்தக் கடுதாசியும் குப்பைத் தொட்டியை அடையுமாறு செய்யும் முயற்சியில் அவர்கள் பின் வாங்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

நமது குறிப்புகள்

தட்புடல் தாசில்தார்

நன்னிலம் தாலுகாவின் ஸர்வேச்வரனாக தம்மை எண்ணிக் கொண்டு தர்பார் நடத்தும் தாசில்தாரைப் பற்றி பத்திரிகைக்காரர்கள் எழுதி எழுதிக் கையும் அலுத்துப் போய் விட்டனர். அந்த மகானைப் பற்றி சென்னைச் சட்ட சபையில் கேள்விகள் போடப்பட்டன. அப்போது சர்க்கார் அதிகாரி, "பதில் கூற எனக்கு நோட்டீஸ் வேண்டும்" என்று சாக்குக் கூறி தப்பித்துக் கொண்டார்.

சில விடங்களில் மிராசுதார்களின் சொந்த உபயோகத்துக்கான நெல்லுச் சேர்கள், உழவு மாட்டுக்குத் ஜீவனமான வைக்கோற் போர்கள், வீட்டுக் கதவுகள், கட்டில்கள், சமையற் பாத்திரங்கள் இவைகள் சர்க்காரால் ஜப்தி செய்யப்படுவது வாஸ்தவமா வென்று கேள்வி போடப்பட்டது. பாக்கி சாமான்களைப் பற்றி தமக்கு யாதொன்றும் தெரியாதென்றும், ஆனால் சட்டப்படிக்கு ஒரு ஜதை உழவு மாட்டைத் தவிர்த்து பாக்கி மாடுகளை ஜப்தி செய்ய சர்க்காருக்கு அதிகார மிருப்பதாகவும் ரிவினியூ மெம்பர் பதிலளித்தார். அந்த அதிகாரம் 1892ம் ஹூலத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஓர் கூற்றுகும். இந்த ஐம்பது வருடத்துப் பொட்டை அதிகாரத்தை இப்போது அமுலில் காட்டுவது சர்க்காருக்குத் தான் கவுரவமா? அதைப் பற்றிக் கூறிக் கொள்வது ரிவினியூ மெம்பருக்குத் தான் அழகா?

"வேஷத்தை மாற்றுதே!"

இன்றைக்கு பைஜாமா—நாளைக்கு வேஷ்டி—நாளன்று ஸூட்—அடுத்த நாள் மூலக் கச்சம்—இப்படியாக நமது இளைஞர்கள் தங்கள் 'குஷி' பிரகாரம் ஆடை யணிந்து கொள்கின்றனர். வங்காள துரைத்தனம் இதைக் கட்டுப்படுத்த இப்போது ஒரு சட்டம் போட்டிருக்கிறது. தனது ஜாதி வழக்கத்துக்கு விரோதமாக எத்தகைய ஆடை அணிபவனும் தண்டிக்கப் படுவானென்று அச்சட்டம் மிரட்டுகிறது. புரட்சிக்காரர்கள் மாறு வேட மணிந்து ஓடிப் போவதைத் தடுப்பதற்காக அந்தச் சட்டமாம்! வெகு பேஷ்! இனிமேல் கல்யாண நலுங்குகளில் ஆணுக்குப் பெண் வேஷமும், பெண்ணுக்கு ஆண் வேஷமும் போட்டுக் களிக்கின்றவர்களும் எச்சரிக்கையா யிருக்க வேண்டுமன்றோ!

எரவாடா கோயிலில்

கண்டோம்! கலி தீர்ந்தோம்! எரவாடா கோயிலில் எழுந்தருளி யிருக்கும் தெய்வீக புருஷனைக் காணும் பாக்கியமும், பேசும் பாக்கியமும் கிடைத்தது. அய்யனிட மிருந்து உத்தரவு கிடைத்த நாள் முதல் கனவிலும், நினைவிலும் எரவாடா சிறையே தென்பட்டுக் கொண்டிருந்தது. கடைசியில் கனவு மெய்ப் பட்டது. ஓடோடியும் எரவாடா சென்றோம். காசி, மெக்கா, எருசலேம் யாவும் எங்கட்கு இப்போது எரவாடாவே யன்றோ! மகாத்மாஜி யுடனிருந்த அம்மூன்றரை மணி நேரத்துக்கு முன்பு ஸ்வர்க்கமும், இந்திர லோகமும் எம்மாத்திரம்?

முதல் நாள் காங்கிரஸ் அக்கிராஸனரான ஸ்ரீயுத ஆனே காந்திஜியைக் காண அநுமதி கோரி யிருந்தார். சர்க்கார் அவருக்கு அநுமதி தரவில்லை. மறு நாள் தான் யாம் பூனா போய்ச் சேர்ந்தோம். எமக்கு அநுமதி கிடைக்குமா, கிடைக்காதா வென்று மனது சஞ்சலப் பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் யாம் செய்த புண்ணியமும், நோற்ற நோன்பும் பலனளித்தது. அய்யனைக் கண்டோம்! அகங் களித்தோம்.

நான்கு புறமும் சுவர் எழுப்பப்பட்ட ஓர் முற்றம். அம் முற்றத்தின் ஓர் புறத்தில் கம்பி போடப்பட்ட சில அறைகள்—ஒரு வராந்தா—பாக்கியெல்லாம் வெட்டவெளி—அம் முற்றத்தில் இரண்டு வேப்பஞ் செடிகள்—பாரத நாட்டின் சரிதையில் ஓர் இடம் பெற்றுவிட்ட அந்தச் சிறிய மா மரம். முற்றத்தின் மற்ற இடங்களிலெல்லாம் வெய்யில் பலமாக எரித்துக் கொண்டிருக்கிறது. அந்த வெய்யிலில், மதிற் சுவர் ஓரமாக போடப்பட்டிருந்த ஓர் கட்டிலில், காந்திஜி அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். பண்டைக் காலத்தில் முனிவர்கள் பஞ்சாக்கினி மத்தியில் நின்று தவம் செய்தார்களென்று படித்திருக்கிறோம். இன்று எரவாடா வெய்யிலில் நமது மகான் தவம் புரிந்து கொண்டிருக்கும் காக்ஷியை நாம் நேரில் கண்டோம். "பாபு சூரிய ஸ்னனம் செய்கின்றார்" என்று அங்கிருந்த நண்பர் எம்மிடம் கூறினர். தேகாரோக்கியப் பரீக்ஷை செய்வதில் மகாத்மாஜிக்கு இஷ்டமன்றோ!

இந்த முற்றம் தான் அவதார புருஷனின் காரியாலயமாகும். கட்டுக் கட்டாக கடிதங்களும், தந்திகளும் வந்து கொண்டே யிருக்கின்றன. ஓர் மூலையில் மதறுவி 'டைபிஸ்டு' டைப் அடித்த வண்ணமே இருந்து கொண்டிருக்கிறார். மா மரத்து நிழலில் ஓர் மேஜையினருகே ஸ்ரீயுத மகாதேவ தேசாயும், 'ஹரிஜனம்' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் ஆர். வி. சாஸ்திரியாரும் வேலை செய்த வண்ணமே யிருந்து கொண்டிருக்கின்றனர். மகாத்மாவோடு எப்போதும் வேலை செய்து கொண்டிருக்கும் அப் புண்ணிய புருஷர்களின் பாக்கியம் தானென்னே! வெகு சுறு சுறுப்பாக அங்கு வேலைகள் நடப்பதைக் காணும் போது அது ஓர் சிறை யென்றே நமக்குத் தோன்ற வில்லை. அது ஓர் ஹரிஜன காரியாலயம்! வேறு சிலருக்கு தேவாலயம்!

பண்டித லக்ஷ்மண சாஸ்திரி என்ற பண்டிதர் தினந்தோறும் சிறைக்கு வந்து கொண்டிருக்கிறார். தீண்டாமை விலக்கு விஷயமாக சாஸ்திர ஆதாரங்களைக் காட்டி யதாபூர்விகளைத் திகைக்கச் செய்பவர் அவர்தான் என்பதை அறிந்தோம்.

நடுப் பகல் மூன்று மணிக்கு மகாத்மாஜி நூல் நூற்க ஆரம்பிக்கின்றார். அந்த சமயத்தில் தன்னைக் காண வந்திருப்பவர்களோடு பேசுகின்றார். கிழவருக்கு வயதாகி விட்ட படியால் முகத்தில் சுருக்கம் அதிக மேற்பட்டிருக்கிறது. தேகம் மெலிந்தும் இருக்கின்றது. 'கிழவரால் உபவாஸ விரதத்தைத் தாங்க முடியாது' என்று ராஜாஜி சொன்னபோது அதை நம்பாதிருந்தவர்கள் நேரில் மகாத்மாவைக் கண்டால் கண்ணீர் சொரிந்து விடுவார்கள். ஆனால் அவ்வளவு சரீரம் தளர்ந்திருப்பினும் மகாத்மாவின் தியாக பத்தியோ பன்மடங்கு அதிகமாகி யிருப்பதையும், தேஜஸ்ஸும், புன் சிரிப்பும், தமாஷ் சம்பாஷணையும் விருத்தியாகி யிருப்பதையும் கண்டோம்.

ஏதோ ஓர் ஜெயில் வார்டரைத் தவிர, ஜெயில் அதிகாரிகள் எவரும் அந்த முற்றத்தில் காணப்பட வில்லை. ஆனால் அங்கு நடக்கும் சம்பாஷணைகளுக்கு ஜெயில் சூப்ரண்டாக 'ஆக்டிங்' வேலை பார்ப்பவர் காந்திஜி தான். இராஜீய சம்பந்தமான எந்தப் பேச்சும் அங்கு பேசப் படுவதற்கு அவர் இடங் கொடுக்கிறாரில்லை. "ஓ! அது ராஜீயமாச்சே" என்று சம்பாஷணை செய்பவர்களை அவ்வப்போது தேக்கி விடுகின்றார் காந்திஜி! ஹரிஜன முன்னேற்றத்தைத் தவிர வேறெதையும் பேசுவதில்லை யென்று சர்க்காருக்குக் கொடுத்துள்ள வாக்கை அணுவளவும் மீறாமல் காந்திஜி காரியங்கள் செய்து வருகின்றார். வாழ்க இந்த சத்திய சந்தன்!

எங்களுடைய சம்பாஷணையில் முக்கியமான விஷயம் ஒன்று தான். "தென்னாட்டிலுள்ள ஹரிஜனங்களுக்கு கல்வி புகட்டுவது மிக முக்கியமான விஷயம். இப்போது நடந்து கொண்டிருக்கும் ஹரிஜனப் பள்ளிக்கூடங்கள் பொது ஜனங்களின் உதவியால் பன் மடங்கு விருத்தியாக வேண்டும். புதிய பள்ளிக்கூடங்களும் தோன்ற வேண்டும். இவ் விஷயத்தில் பொது ஜனங்கள் அதிக சிரத்தை காட்ட வேண்டும்" என்பதுதான் மகாத்மாஜி நம்மோடு பேசிய பேச்சின் சாராம்சமாகும். "சங்கு" காரியாலயத்தைப்பற்றி விவரமாக விசாரித்ததோடு மகாத்மாஜியின் ஆசியும் எமக்குக் கிடைத்தது.

பிறகு ஸ்ரீயுத மகாதேவ் தேசாயினிடம் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தோம். தேசாய் இப்போது தமிழ் கற்றுக் கொண்டிருக்கிறார். "உங்கள் 'சங்கு' பத்திரிகையை நானே படிக்க வேண்டு மென்பதற்காக தமிழ் கற்றுக் கொண்டிருக்கிறேன்" என்று அவர் சொன்னபோது அப்பெரியார் நம்மிடம் காட்டும் பிரியம் வெளிப்பட்டது.

மணி நான்காயிற்று. மகாத்மாஜி தமது கெடியாரத்தை இடுப்பினின்று எடுத்துப் பார்த்தார். உடனே அவருக்கு இராப் போஜனம் வந்து சேர்ந்தது. பப்பாளிப் பழம், ஆரஞ்சுகள், திராக்ஷை, தேன் முதலியன அக் கூடையில் காணப்பட்டன. நம்மோடு திரு. கணேசனின் குழந்தையும் மகாத்மாவைக் காணக் கொண்டு போகப் பட்டிருந்தது. அக் குழந்தையிடம் ஒரு ஆரஞ்சுப் பழத்தை எடுத்துக் கொடுத்து காந்திஜி கொஞ்சினர். "ஹோ! குழந்தைகளிடம் லஞ்சம் கொடுத்தால்தான் காரியமாகிறது" என்று வேடிக்கையாகக் கூறினர்.

கால சக்கிரத்தின் சுழற்சியில் இன்று இப் புனித புருஷன் சிறையில் இருக்கின்றார். வெளியே யுள்ள யாம் காந்திஜியின் விடுதலையைப் பற்றி என்னென்னமோ பிரமாதமாக மூட்டை யளக்கின்றோம்; பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனல் அந்தச் சாந்த புருஷனுக்கோ அதைப் பற்றி துளியாவது அக்கரையே கிடையா தென்பது நன்றாகத் தெரிந்தது. 'ராமனிருக்கு மிடம் அயோத்தி' என்பது போல 'காந்திஜியிருக்கு மிடம் தான் பாரதத் தாயின் இருப்பிடம். நாட்டின் விடுதலையும் தேச முன்னேற்றமும் அந்தக் கிழவரின் உள்ளங் கையில் இருக்கிறது' என்று நமக்குள் பேசிக் கொண்டே திரும்பினோம். வாழ்க எரவாடா முனிவன்!.

நாரதர் கேள்வி

தமிழ் நாட்டுப் பண்டைச் சாதிகளுள் 'செங்குந்தர் மரபு' முக்கியமானது. தற்காலத்தில் இச் சமூகத்தினரில் 100க்கு 90 பேர்கள் கை நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். வருஷா வருஷம் இவர்கள் ஓரிடத்தில் மகாநாடு கூடி தங்கள் முன்னேற்றத்திற்கான மார்க்கங்களைப் பற்றி முடிவு செய்கின்றனர். இவ் வருஷத்திய மகாநாடு சமீபத்தில் திருவாரூரில் நடைபெற்றது. கோவை திரு. வி. எஸ். செங்கோட்டய்யா முதலியார் தலைமை வகித்துப் பேசுகையில் அக்காலத்திய இந்திய வியாபார உலகின் சுபிட்சத்தை வர்ணிக்க கீழ்க் கண்ட ஒரு புரான சம்பவத்தைக் குறிப்பிட்டார்.

"தங்கள் ராஜ்யத்தில் வர்த்தகம் நடத்துபவர்கள் சத்தியவான்களாக இருக்கின்றார்களா? நூலும், தறிகளும் கொடுத்து உதவுவதோடு நெசவுக்காரர்களுடைய குடும்பத்தாருக்கு நாலு, ஐந்து மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருள்களும் கொடுத்து உதவி வருகிறீர்களா? இது போல இதர தொழிலாளர்களையும் அரசாங்கம் காப்பாற்றி வருகின்றதா?" என்று நாரதர் தர்ம புத்திர மகாராஜனைப் பார்த்துக் கேட்டதாக மஹா பாரதம் சொல்கின்றது.

பூர்வ இந்தியாவில் வர்த்தகர்களையும், தொழிலாளர்களையும் பாதுகாப்பது அரசாங்கத்தாரின் கடமையாக இருந்த தென்பது இதனல் விளங்குகிறதல்லவா? ஆனல் அக்காலத்தில் இந்தியா தேசம் அன்னியருக்கு அடிமைப் பட்டுக் கிடக்கவில்லை யென்பதும், அக்காரணத்தினலேயே அத்தகைய நிலைமை சாத்தியமாக விருந்த தென்பதையும் நாம் அறிய வேண்டும். இப்பொழுது ராஜ்ய உரிமையைப் பறிகொடுத்துத் தவிக்கும் பாரதத்தில் மேற்படி நியாயம் தலை கீழ் மயமாகத்தானே இருக்கும்?

மீண்டும் பழைய நிலையை நாம் அடைய வேண்டுமானல், காந்திஜியின் கனவிலுள்ள 'தர்ம ராஜ்யம்' உண்மையில் ஸ்தாபித மாகையில் தான் அது சாத்தியமாகும்.

ஆதி முதல் அளப்பே!

நிலத் தீர்வையை எட்டிலொரு பங்கு குறைக்க வேண்டுமென்று சென்னைச் சட்டசபை தீர்மானித்ததை, சர்க்கார் குப்பைத் தொட்டியில் எறிந்தார்கள். அவ்வாறு எறிந்ததை ஆமோதித்து ஓர் அளப்பு அளந்தார்கள். சமீபத்தில் சென்னை ரிவினியூ மெம்பர் சட்டசபையில் இன்னொரு அளப்பு அளந்திருக்கிறார்.

"குறிப்பிட்ட இடங்களில் வரி வசூலிப்பதில் எட்டிலொரு பங்கு தீர்வையை ஒத்தி வைக்க முடியுமேயன்றி வஜா செய்ய முடியாது. ஏனெனில் வெள்ளம் வந்தாலோ, அதிக மழை பெய்து சேதாரமானாலோ அந்த சமயங்களில் தான் வரி வஜா செய்வது வழக்கம். புதிய ஸெட்டில்மெண்டுபடி பார்க்கப் போனால் விலை வாசி குறைந்திருக்கும் காரணமாக தீர்வையை வஜா செய்வதென்பதற்கு இடமில்லை" என்று பொருள் படும்படி ஒரு அளப்பு அளந்தார்.

விவசாயி கேட்பது வஜா! சர்க்கார் தருவது காலத் தவணை! வெகு நன்றாயிருக்கிறது! 'பப்பு உந்தா இண்டே உப்பு உந்தி' என்ற தெலுங்கன் தோரணையில் இருக்கின்றது இந்த முடிவு.

"நெல்லை விற்க முடியவில்லை; கையிலோ காசுமில்லை; கடன் கொடுப்பார் யாருமில்லை. ஆகவே இவ் வருடம் வரியைத் தள்ளிக் கொடுங்கள்" என்று மிராசுதாரர் கூவுகிறார்கள். சர்க்காரோ கிஸ்தியை ஒத்தி வைப்பதாகச் சொல்கின்றனர். இன்றைக்கு கிடைக்காத காசு நாளைக்கு எங்கிருந்து கிடைத்து விடுமோ தெரியவில்லை. கால நிலைமையை ஒட்டி வரியைக் குறைப்பதும் வஜா செய்வதுமே சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் கடமை. அவ்வாறு செய்யாமல் "ஹே சனீஸ்வரனே நாளைக்கு வா!" என்று சொல்வது போல "ஹே கிஸ்தியே! நீ பிறகு வா. இப்போது வராதே" என்று சொல்வது வெந்து போன புண்ணில் வேலிடுவது போலிருக்கிறது.

சர்க்காருக்கு ஈவு இரக்கமிருக்குமாயின், குடியானவனின் வரிச் சுமையை உடனே குறைக்க வேண்டும். இல்லாவிடின் நாட்டில் ஏற்படப் போகும் கஷ்ட நஷ்டங்களுக்கு சர்க்காரே பொறுப்பாளிகளாவார்கள். மிராசுதார்கள் விஷயத்தில் சர்க்கார் அதிகாரிகளின் பேச்சு ஆதி முதல் வெறும் அளப்பாகயிருந்து வருகிறதேயன்றி மிராசுதார்கள் கண்ட பலன் ஏதுமில்லை.

மந்திரியே! ராஜினாமா கொடு!

'ஊர் எக்கேடு கெட்டாலென்ன? எங்கள் பொக்கிஷம் நிரம்பினால் போதுமென்பதே' சென்னையில் கலால் மந்திரியாயிருக்கும் குமாரஸாமி ரெட்டியாரின் கொள்கையாயிருக்கிறது.

"மாகாணத்தின் செல்வ நிலை பாதிக்கப்படாமலிருப்பதற்காக கலால் வருமானத்தை குறைத்துக் கொள்வதற்கில்லை" என்கின்றார் மது மந்திரி. நல்ல மதி மந்திரியையா இந்தப் பேர்வழி. இதைவிட நடுத் தெருவில் நின்று கொண்டு "எல்லோரும் கள்ளைக் குடியுங்கள்! சர்க்காருக்கு கள் வரியாகக் காசைக் கொடுங்கள்" என்று இந்தப் பேர்வழி தம்பட்டமடிப்பது தேவலை போலிருக்கிறது.

பசுவைக் கொன்று செருப்பு தானமா? கள் விற்றுவரும் வரும்படி ஒவ்வொரு பைசாவும் பாபக் காசாகும். எத்தனை குடும்பங்களைக் கள் பாழாக்குகின்றது? எத்தனை கொலைகளுக்கு கள்ளுக் குடி காரணமாயிருக்கிறது? அப்பேர்ப்பட்ட கள்ளினால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஒரு சர்க்கார் நடப்பதை விட தேசத்தில் எந்த வித அரசாங்கமுமில்லாமல் இருப்பதே நலம் என்று தீவிரவாதிகள் கூறுகின்றனர்.

மிதக் குடி பிரசாரம் செய்வதையும், அதற்காகப் பணம் செலவிடுவதையும் சர்க்கார் நிறுத்தி விட்டார்கள். பரீக்ஷார்த்தமாக கள்ளுக் கடைகள் எடுக்கப்பட்டிருந்த தாலூக்காக்களில் கடைகளை மறுபடி நுழைத்து விட்டார்கள். இந்த ரீதியில் போய்க் கொண்டிருந்தால் "20 வருஷத்தில் மது விலக்குடைய மாகாணமாக ஆக்கி விடுவோம்" என்று வாக்களித்ததை எப்படி சர்க்கார் நிறைவேற்றப் போகிறார்கள்? குமாரசாமி ரெட்டியாருக்கு ஒரு வார்த்தை! இந்த பாபக் காசைக் கொண்டு தான் சர்க்கார் யந்திரம் ஓட வேண்டுமாயின் அந்தப் பாபத்திற்கு நீர் ஏன் உடந்தையாயிருக்க வேண்டும்? சிறிதாவது ஈசுவர பக்தி, மனித விச்வாசம் முதலியவை உமக்கிருக்குமாயின் சர்க்காருடைய கொள்கையை எதிர்ப்பதற்கு அறிகுறியாக உமது மந்திரி உத்தியோகத்தை ராஜினாமா செய்துவிட்டு ஊரைப் பார்க்கப் போய்ச் சேரும். இல்லாவிடில் பொது ஜனங்களின் அபிப்பிராயமெப்படியிருக்குமென்பதைச் சொல்லவேண்டுமா?

ஹரி ஜன முன்னேற்றம்

(மகாத்மா காந்தி)

"பாரமார்த்திகத்தைப் பற்றியும், ஹரி ஜனங்களின் பாரமார்த்திக முன்னேற்றத்தைப் பற்றியும் தாங்கள் எழுதுகிறீர்களே, அவற்றின் அர்த்தமென்ன? ஹரிஜன முன்னேற்றம் தடைபடுவதால் உலக முன்னேற்றம் என்னமாகத் தடைப்படும்? ஹரி ஜனங்களைக் கோயில்களுக்குள் அனுமதிக்காவிடில் அவர்களின் பாரமார்த்திக முன்னேற்றம் என்னமாகத் தடைப்படும்?" என்று ஒரு நிருபர் எழுதியதற்கு மகாத்மா பதிலளித்திருப்பதாவது :—

"பாரமார்த்திகம் என்பது ஆத்மாவைப் பற்றியது. அழியாத் தன்மை பெற்றது ஆத்மா. ஆத்ம உயர்வுக்கான சாதனங்களை யளிப்பதே பாரமார்த்திகம். நமது சமூகம் அமைந்துள்ளபடி பார்த்தால் என்னுடைய பக்கத்திலிருப்பவரின் முன்னேற்றம் தடைப்பட்டால், என்னுடைய முன்னேற்றமும் தடைப்பட்டுத் தான் தீரும். இதே முறையில் கவனித்தால் இந்தியாவின் முன்னேற்றம் தடைப்பட்டால் இந்தியாவை அடுத்த தேசங்களின் முன்னேற்றமும் தடைப்படும். 4 கோடி ஹரி ஜனங்களின் பாரமார்த்திக முன்னேற்றம் தடைப்பட்டால் மற்ற இந்திய மக்களின் முன்னேற்றமும் நிச்சயமாகத் தடைப்பட்டே தீரும்."

* * * *

எல்லாச் சேவைகளிலும் ஹரி ஜன சேவை மிகவும் கடினமானது என்பது இப்பொழுது அனுபவத்தால் தெரிய வருகின்றது. எனக்குத் தெரிந்த வரையில் எத்தனையோ ஸ்திரீகளும், பெண்களும் எண்ணற்ற ஹரி ஜனங்களுக்குச் சேவை புரிந்து வருகின்றனர். தோட்டிகளின் மத்தியில் சென்று வேலை செய்து வரும் ஒரு ஸ்திரீ தனது துயர் மிகுந்த அனுபவங்களைப் பற்றி எனக்கு எழுதி யிருக்கிறாள். முதலில் அந்த இடங்களுக்குச் செல்லுகையில் அவள் வாந்தி யெடுத்து விடும்படி கூட நேரிட்டதாம். அவள் எழுதுவதாவது :

"அழுக்கிலும், குப்பையிலும் வசித்து வரும் ஹரி ஜனங்களுக்கு எவ்விதத்தில் சேவை செய்வது? தங்களுக்கு எவரும் சேவை புரிய வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கில்லை. அவர்களுடைய சேரிகளுக்குச் செல்பவர்களை அவர்கள் திட்டுகிறார்கள். சிலர் தொண்டர்கள் மீது கற்களையும் எறிகின்றார்களாம். இருந்தாலும் நாம் அவர்களுக்குப் பணி செய்தே தீர வேண்டும். அப்பொழுது தான் நாம் நம்மையே உயர்த்திக் கொள்ள முடியும். அவர்களைத் தாழ்த்தி வைத்ததன் மூல்யமாக நாமும் தாழ்ந்து போனோம்.

"ஹரி ஜனப்பணி புரிபவனிடம் கீழ்க் கண்ட குணங்கள் காணப்பட வேண்டும் :—

அவனுக்கு ஹரி ஜனங்களின் மீது உண்மையான அன்பு இருக்க வேண்டும். அவர்கள் தங்கள் குடும்பத்தினரைச் சேர்ந்தவர்கள் என்று கருத வேண்டும்.

எத்தகைய அவமானங்கள் ஏற்பட்டாலும் சரி, உடம்பிற்குக் காயமுண்டானாலும் சரி, அவனுக்கு விசேஷ பொறுமையும், தைரியமுமிருக்க வேண்டும்.

மாசில்லா குணமிருத்தல் வேண்டும்; சந்தேகப்படுவதற்குச் சற்று மிடமிருக்கக் கூடாது.

எது கிடைக்கின்றதோ அதைச் சாப்பிட்டுப் பசியை ஆற்றிக் கொள்ளத் தயாராக விருக்க வேண்டும்.

சத்தியத்தினிடமும், தங்களிடமும் அவர்களுக்கு அழியாத நம்பிக்கை யிருக்க வேண்டும். இத்தகைய ஊழியர்கள் ஆயிரக் கணக்கில் இருந்தால் தான் ஹிந்து மதத்தினின்று தீண்டாமை மாசைப் போக்க முடியும்."

* * * *

"சென்னை மாகாணத்திலுள்ள 72 லக்ஷத்து, 99 ஆயிரத்து 400 ஹரி ஜனங்களுக்குள் 86 பிரிவுகள்! இவ்வளவு பேர்களும் பிறக்கும் பொழுதே தீண்டாதவர்களாகவே பிறந்தனர் என்று ஸனாதனிகள் சொல்லுவார்கள். சர்க்கார் எடுத்த ஜன சங்கியைக் கணக்கில் மேற்படி பிரிவுகளின் தொகைகள் சேர்க்கப் படுவதற்கு முன்பு அவர்கள் எவ்வாறிருந்தனர்? இந்தப் புள்ளி விவரங்களைப் படிக்கப் படிக்க தீண்டாமை யென்பது மனிதனால் உண்டு பண்ணப்பட்டது தான் என்ற உணர்வு அதிகமாகின்றது. தீண்டத் தகாதவர்களைக் கடவுள் தான் சிருஷ்டித்தார் என்றால் இவ்வளவு பிரிவுகள் எங்கிருந்து கிளம்பின? இவை எதற்காக விருக்கவேண்டும்? இத்தனை உட்பிரிவுகளுக்கும் காரணம் ஜாதி ஹிந்துக்களைத் தவிர வேறு யார்? அவர்கள் பொதுவான தீண்டாமையை அகற்றி விட்டால், இந்த உட்பிரிவுகளெல்லாம் காலக் கிரமத்தில் தாமாகவே அழிந்து விடும்."

—"ஹரிஜனம்".

சிந்தாமணி ஓலம்

வெள்ளைக் கடுதாசி வெளியாகும் தினம் நெருங்க நெருங்க சில மிதவாதிகளின் ஓலமும் நாட்டில் வலுத்து விட்டது. இந்த மிதவாத வௌவால்களுக்குப் புத்தி வர இத்தனை நாளா யிற்று. சமீபத்தில் பம்பாயில் செய்த பிரசங்கத்தில் மிதவாதிகள் சபைத் தலைவரான சிந்தாமணி பின் வருமாறு பேசினார்.

"வெள்ளைக் கடுதாசி வட்ட மேஜைத் தீர்மானங்களை விட இன்னும் பிற்போக்கானதாக இருக்கப் போகிறது. இனி மேல் இராஜப் பிரதிநிதி எதேச்சதிகாரம் மிகுந்தவராக இருக்கப் போகிறார். 'அவஸரம் அவஸரம்' என்று அநேக சட்டங்களை இயற்றிக் கொள்ள அவருக்கு அதிகாரம் தரப்படப் போகிறது. அவரது யதேச்சாதிகாரச் சட்டங்களை ரத்து செய்ய சட்ட சபைகளுக்கும் அதிகார மிருக்கப் போவதில்லை.

"ஸர் ஸாமுயேல் ஹோர், கையில் வழ வழப்பான மகமல் கையுறை போட்டுக் கொண்டே பேசுகிறார். ஆனால் உள்ளே இருப்பது என்ன? பலமான இரும்புக் கை!

"கவர்னர்கள் முட்டாள் தனமாக தங்களுடைய விசேஷ அதிகாரங்களை உபயோகப் படுத்த மாட்டார்களென்று சர்வ கட்சி மகாநாட்டில் பசப்பு வார்த்தை சொல்லப்பட்டது. ஆனால் நமது அநுபவம் இதுவரை எப்படி யிருந்திருக்கிறது. தெரியுமா? கவர்னர்கள் நிர்வாக சபை இஷ்டப்படி செய்யட்டு மென்று விட்டு விட்டுக் குந்திக் கிடந்தார்கள். நிர்வாக சபையினர் அந்தந்த இலாகா அதிகாரிகள் செய்து கொள்ளட்டு மென்று விட்டுக் கொடுத்தனர். அவர்களோ ஜில்லா மாஜிஸ்திரேட்டுகள் இஷ்டப்படி செய்யட்டு மென்று இருந்து விட்டார்கள். கடைசியில் நாம் கண்ட காட்சி யென்ன வென்பதை சொல்லத் தேவையில்லை. ஆகவே கவர்னர்களுக்கு சர்வாதிகாரம் கொடுக்க சம்மதிக்க லாகாது என்பது ஏற்படுகிறதல்லவா?

வரப்போகின்ற அரசியலில் மகாத்மா காந்தி கோருகின்ற சுதந்திரத்தின் நிழல் கூடக் கிடையாது. மிதவாதிகளாகிய நாங்கள் கோரும் குடியேற்ற நாட்டரசியலின் சாயல் கூடக் கிடையாது. ஆகவே இந்தப் புதிய ஏற்பாடு எவரையும் திருப்தி செய்யாது."

ஐயா சிந்தாமணி! இப்போதாவது உமக்கு புத்தி வந்ததே! இனி என்ன செய்யப் போகிறீர்கள்? ராஜாஜி சொல்வதுபோல ராஜீயத்தை விட்டு விட்டு மிதவாதிகளாகிய நீங்கள் விலகி நில்லுங்கள். இந்த சர்க்காரை இதர தேச பக்தர்கள் பணிய வைக்கிறார்களா, இல்லையா வென்பதை கவனித்துக் கொண்டிருங்கள்.

ஏகாதிபத்திய பூதம்

'ஏகாதிபத்தியம்' என்ற நுகத்தடி இந்தியாவின் கழுத்தை நெருக்கி வருவது யாருக்குத் தான் தெரியாது? இந்தத் துன்பத்தை ஒவ்வொரு இந்தியனும் அநுபவித்து வருகிறான். ஏகாதிபத்தியச் செருக்கு உள்ள அளவும் உலக விமோசனத்திற்கு வழியில்லை என்றும் ராஜீய வாதிகள் கரடியாய்க் கத்தி வருகின்றனர்.

ஆயினும் ஏகாதிபத்தியத்தைக் கண்டித்து இந்தியர் வெளியிடும் அபிப்பிராயத்தை விட வெள்ளையரின் கருத்து சற்று கவனிக்கத் தக்கதல்லவா? 'E. M.' என்ற வெள்ளையர் "நவீன உலகம்" (The New World) என்ற ஆங்கிலப் பத்திரிகையில் எழுதி யிருப்பதாவது:

"ஏகாதிபத்தியம் மகா கொடூரமாக, இந்தியப் பாமர மக்களை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. ஏழை இந்தியனின் தினசரி வருமானம் என்ன? இரண்டணாவிற்கும் குறைவு தான். ஆனால் அவன் முதுகின் மீதுள்ள வரிச் சுமைகளோ எண்ணிறந்தவை. ஸிவில் உத்யோகஸ்தர்களுக்கும், ராணுவ இலாகாவிற்கும் ஏற்படும் அபரிமிதமான செலவைச் சரிக்கட்ட இந்தியனின் இரத்தம் கசக்கிப் பிழியப் படுகின்றது. உலகில் வேறெந்த தேசத்திலும் இத்தகைய மண்டை பருத்த துரைத்தனம் கிடையாது. தான் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் சொற்பக் காசையும் வரியாகக் கொடுத்து விட்டு இந்தியன் வயிற்றைக் காயப் போட்டுக் கொண்டு வாடுகிறான். தொழிற்சாலைகளில் ஆண்களும், பெண்களும், சிறு சிறு குழந்தைகளும் கூட வேலை செய்கின்றனர். இருந்தாலும் பசியை யாற்றுவதற்கான கூலி கூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை. குவியும் ஏராளமான லாபங்களெல்லாம் பிரிட்டிஷ் முதலாளிகளுக்குப் போகின்றன.

இந்திய மக்கள் தங்கள் கஷ்டங்களை வெளியிட ஒன்று கூடினால் அவர்கள் தடி கொண்டு தாக்கப் படுகின்றனர்; சில சமயங்களில் துப்பாக்கி கூட உபயோகிக்கப் படுகின்றது. இப்படியாக ஏகாதிபத்திய பூதத்திற்காக இந்தியன் பலி யிடப்படுகிறான். என்ன அநியாயம்?"

பொறுக்கிய புஷ்பங்கள்

நாமக்கல்லில் 'காந்தி தபால்' விற்றதற்காக தொண்டர் அங்கண்ணா நாயுடு என்பவர் கைதியானர். தபால் பெட்டிகள் வேறு பூட்டுப் போட்டு பூட்டப்பட்டிருந்ததால் அதிகாரிகள் பூட்டை யுடைத்து தபாலைச் சேகரித்தனராம். தாலுக்கா காங்கிரஸ் 5-வது சர்வாதிகாரி ஸ்ரீமான் இராமானுஜய்யங்கார் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கள்ளிக்கோட்டையில் 'கேரள தின'த்தன்று 14 பேர்கள் தேசியக் கொடியுடன் ஊர்வலம் சென்று கொண்டிருக்கும் போது போலீஸார் தடை செய்து பலவந்தமாக கலைக்கவே எல்லாத் தொண்டர்களுக்கும் ரத்தக் காயம். எல்லோரும் கைது செய்யப்பட்டனர்.

கண்ணனூரில் 'அன்னியத் துணி பகிஷ்கார தின'க் கொண்டாட்ட சம்பந்தமாக கைது செய்யப்பட்ட நால்வருக்கும் தலா ஒரு குற்றத்துக்கு 6 மாதமும், 25 ரூ. அபராதமும், இன்னொரு குற்றத்துக்கு 2 வருஷமும் 50 ரூ. அபராதமும். செவ்வாயன்று காலையில் தெருக்களிலும், தீபஸ்தம்பங்களிலும் தேசியக் கொடிகள் பறந்து கொண்டிருந்ததை போலீசார் வந்து அப்புறப்படுத்தினர். ஹோட்டலுக்கு காலையில் டீ சாப்பிட வந்த ஒருவரும், தூங்கிக் கொண்டிருந்த ஒருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

பம்பாயில் 'டாண்டி தின'க் கொண்டாட்ட சம்பந்தமாக நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் 44 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 4 பேர் ஸ்திரீகள். காங்கிரஸ் புல்லட்டீன் பிரசுரத்தில் கலந்து கொண்டதாக சந்தேகித்து சட்ட கலாசாலையில் வாசிக்கும் பார்ஸி வகுப்பு மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

லாகூரில் சட்ட விரோதமான ஊர்வலங்களை நடத்தியதாக குற்றம் சாட்டப் பட்டவர்களில் இருவருக்கு தலா 3 மாதமும், ஒருவருக்கு 1000 ரூபாய்க்கு ஜாமீனும், தவறினால் ஒரு வருஷ வெறுங் காவலும்.

கட்டாக்கில் காங்கிரஸ் வேலைகளில் கலந்து கொண்டதற்காக கைது செய்யப்பட்ட 29 பேர்களுக்கு 3 மாதம் முதல் 9 மாதம் வரையில் பலதரப்பட்ட தண்டனை.

ஆமதாபாத்தில் "நவஜீவன்" என்னும் கையெழுத்துப் பத்திரிகையின் ஆசிரியரான சிக்குபாய் தேசாய் என்பவர், போலீசார் முன் ஆஜராகும்படி வந்த உத்திரவை மீறியதற்காக கைது செய்யப்பட்டார்.

பீகார் மாகாண சர்வாதிகாரி சத்திய நாராயண சிங்கும், இந்தியா சட்ட சபை மாஜி அங்கத்தினரான தேவகி பிரசாத் சின்ஹாவும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் வீடுகளும் சோதனை யிடப்பட்டனவாம்.

கல்கத்தாவில் நடைபெற விருந்த இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபையின் வரவேற்புக் கமிட்டி பொது ஜன அமைதிக்குப் பங்கம் விளைவிக்குமெனக் கருதி, அதை சட்ட விரோதமான கூட்டமாக்கி வைஸ்ராய் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

அகில இந்திய காங்கிரஸ் சபையின் தலைவரான ஸ்ரீமான் ஆனே காந்திஜியைக் காணப் பூனாவுக்கு சென்றபோது அவருக்கு பேட்டி அநுமதிக்கப்பட வில்லை.

சீனவில் வடபுற எல்லைச் சுவரில் சீனவுக்குப் பெருத்த வெற்றி ஏற்பட்டிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இரண்டு ஜப்பானிய ராணுவப் பகுதிகள் தோற்கடிக்கப்பட்டு, நாசமாக்கப் பட்டனவாம்.

சென்ற வாரத்தில் இந்தியாவை விட்டு வெளி நாட்டுக்குச் சென்ற தங்கத்தின் மதிப்பு ரூ. 84 லக்ஷத்து 44 ஆயிரத்து 305 ரூபாய்.

"நமது எண்ணம் நிறைவேறினலொழிய நாம் நமது போராட்டத்தை விட்டு விட முடியாது. காந்திஜி விஷயமாக அரசியல் வாதிகள் கூறும் யோஜனைக்கு சர்க்கார் செவி சாய்க்காவிட்டால் பார்லிமெண்டரி கமிட்டியுடன் அவர்கள் ஒத்துழைக்கக் கூடாது" என்று ராஜாஜி பம்பாய் பத்திரிகை ஒன்றில் அபிப்ராயம் தெரிவித்திருக்கிறார்.

Edited and Published by S. Subramaniam
and Printed by M. R, Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.